# <u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

O.S. No.730/2023 Date : 18-08-2025

பெயர் : கிருஷ்ணன் பி.வா.சா. 1

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார். தாவா சொத்து ஆதியில் கண்ணப்ப நாயக்கர் என்பவருக்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி கண்ணப்ப நாயக்கருக்கு எவ்வளவு சொத்துக்கள் சொந்தமாக இருந்தது என்றால் 10 சென்ட் இருந்தது. கண்ணப்ப நாயகர் இறக்கும்போது அவருக்கு யார் யார் வாரிசுகள் இருந்தார்கள் என்றால் கண்ணப்ப நாயக்கர் திருமணம் செய்து கொள்ளாமல் இறந்து விட்டார். கண்ணப்ப நாயக்கருக்கு சகோதரர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான் அவர்கள் யார் யார் என்றால் நாராயணன், கோவிந்தன், ஆறுமுகம் ஆகியோர் சகோதரர்கள். ஆறுமுகம் கண்ணப்ப நாயக்கரின் சொத்துக்களில் தனக்கு பாகம் வேண்டாம் என விட்டு சென்று விட்டார் என்றால் சரிதான்.

2. கோவிந்தன் என்பவரும் கண்ணப்ப நாயக்கரின் சொத்துக்களில் பாகம் வேண்டாம் என விட்டு விட்டு சென்று விட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது நாராயணன் என்பவருக்கு முழு உரிமையாளர் சொத்து என்பதால் அவரது பெயரில் தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல தாவா சொத்தானது நாராயணனுக்கு தனிப்பட்ட பட்டா என்றாலும் கூட்டு பட்டா கிடையாது என்றாலும் சரியல்ல. எனது நிறுபன வாக்குமூலத்தில் கண்ணப்ப நாயக்கர் காலமான பின்னிட்டு அச்சொத்தை அவரது சகோதரர்கள் கோவிந்தன் மற்றும் நாராயணன் ஆகியோர்கள் பாகப்பிரிவினை செய்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் அதுபோல் ஏதும் சொல்லவில்லை.

3. நாராயணன் மற்றும் கோவிந்தன் ஆகியோர் மேற்படி சொத்தை எதுவும் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றாலும் அச்சத்தானது நாராயணன் என்பவருக்கு தனிப்பட்ட உரிமை உடைய சொத்து என்றால் சரியல்ல. மேற்குறிப்பிட்டுள்ளது போல் பாகப்பிரிவினை ஏற்பட்டு இருந்தால் அந்த பாகப்பிரிவினை ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு பாகப்பிரிவினை எதுவும் ஏற்படாததால் பாகப்பிரிவினை ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசத்தில் மேற்குப் பக்கத்தில் நான் வீடு கட்டி வசித்து வருவதாக குறிப்பிட்டுள்ளீர் என்றால் இல்லை நான் கீழ்புறத்தில் வசித்து வருகிறேன். வாதி அனுமதி அளித்ததன் அடிப்படையில் தான் தாவாசத்தில் நான் வசித்து வருகிறேன் என்றாலும் தாவாசத்தில் வாதியின் அனுமதியில்லாமல் எனக்கு வசிக்க எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. நான் வசித்து வரும் வீட்டை வாதி தான் கட்டினார் என்றாலும் நான் அந்த வீட்டை கட்டி இருந்தால் அந்த வீட்டின் வரைபட அனுமதி தாக்கல் செய்திருப்பேன் என்றால் வரைபட அனுமதி எதுவும் வாங்கவில்லை.

4. தாவா சொத்தில் உள்ள வீட்டில் வாதி அனுமதித்தன் அடிப்படையில் நான் வசித்து வருகிறேன் என்றாலும் ஆனால் அந்த வீட்டை வாதியிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக தவறான ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது நாராயணன் என்பவருக்கு தனிப்பட்ட முழு உரிமையான சொத்து என்பதால் அவரது பெயரில் வழங்கப்பட்ட பட்டாவை ரத்து செய்ய தற்போது வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல அந்த சொத்தில் எனது தகப்பனார் வழியில் எங்களுக்கும் உரிமை உள்ளது. தாவா சொத்தின் ஒரு பகுதியை வாதி கண்ணன் தனது மனைவிக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram